பாடம்-2

## தேவன் மனிதனோடு எப்படி செயலாற்றினார்?

திருமறை(பைபிள்) யை திட்டவட்டமாக நாம் படிப்பதற்கு முன்புதேவன் மனிதனோடு எப்படி இடைபட்டு செயலாற்றினார் என்பதை பொதுவாகத் தெரிந்துகொள்வது நல்லது. தேவன் மனிதனோடு வெவ்வேறு பிராமணங்களைக் கொண்டு வெவ்வேறு காலங்களில் தனது காரியங்களை செயல்படுத்தியிருக்கிறார்.

## வேதாகம வரலாற்றில் மூன்று யுகங்கள் அல்லது காலங்கள்

திருமறை(பைபிள்)க்காலத்தை மூன்று யுகங்களாகப் பிரித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு யுகத்திலும் தேவன் வெவ்வேறுவிதமாக மனிதனோடு செயலாற்றினார். (எபிரெயர் 1:1.2)

## பிதாக்களின் காலம்

பிதாக்களின் காலத்தில் தேவன் நேரடியாக குடும்பத்திலுள்ள பிதாக்களிடம் (தகப்பன்மாரிடத்தில்) பேசினார். அச்சமயத்தில், எழுதப்பட்ட திருமறையோ அல்லது சட்டமோ இல்லாமையால் குடும்பத்தாருக்குப் போதித்து ஆராதனைக்குள் வழிநடத்துவது பிதாக்களின் பொறுப்பாக இருந்தது. இந்த பிதாக்களின் காலம் என்பது சிருஷ்டிப்பு நாட்களிலிருந்து துவங்கி மோசே யூதர்களுக்கு நியாயப்பிரமாணமாகிய 10 கட்டளைகளையும் அதைச்சார்ந்த கட்டளைகளையும் கொடுப்பதோடு முடிவடைகிறது. (ஆதியாகமம் 1-ம் அதிகாரம் முதல் யாத்திராகமம் 19ம் அதிகாரம் வரை).

## மோசேமயின் காலம்

தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு நியாயப்பிரமாணத்தை மோசேயின் மூலம் எழுதிக் கொடுத்திலிருந்து மோசேயின் யுகம் ஆரம்பமாயிற்று. அந்த பிரமாணத்தின் போதனையைக் கொண்டு தேவன் தனது மக்களாகிய இஸ்ரவேல் தேசத்தாரிடம் மட்டும் தனது செய்திகளை நிறைவேற்றினார். கிறிஸ்து பிறப்பதற்கு 1,500 ஆண்டுகளுக்கு முன்பு இந்த யுகம் ஆரம்பமாயிற்று. இந்த பிரமாண காலம் முடிந்துவிட்டது. (யாத்திராகமம் 20-ம் அதிகாரம் முதல் அப்போஸ்தர் 1-ம் அதிகாரம் வரை). இப்போது நாம் அதற்கு கட்டுப்பட்டவர்கள் அல்ல.

## கிறிஸ்துவின் காலம்

நாம் இப்பொழுது இந்த கிறிஸ்துவ யுகத்தின் கீழ்தான் ஜீவிக்கின்றோம். கிறிஸ்துவின் மரணத்தில் இந்த யுகம் ஆரம்பமாயிற்று. (எபிரெயர் 9:16,17) வானத்தின் கீழிருக்கிற எல்லாதேசத்தவர்களும் இந்த பிரமாணத்திற்குக் கட்டுப்பட்டவர்களே. கிறிஸதுவின் யுகத்திற்கான போதனைகள் யாவும் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. நாம் புதிய ஏற்பாட்டுப் போதனையின்படி ஜீவிக்க வேண்டுமேயொழிய பழைய ஏற்பாட்டின் படியல்ல. (அப்போஸ்தர் 2-ம் அதிகாரம் முதல் வெளி. 22-ம் அதிகாரம் முடிய).

## பழைய ஏற்பாட்டிற்குரிய இடம்

தேவன் பழைய ஏற்பாட்டை நிரந்தரமானதாக கொடுக்காமல் தற்காலியமாக இயேசு வரும் வரை இஸ்ரவேல் மட்டும் கடைபிடிக்கும்படி கொடுத்தார். (கலாத்தியர் 3:19) இன்று பழைய ஏற்பாட்டினால் இரட்சிக்கப்படி விருப்புகிறேன் தேவனுடைய கிருபை இழந்தவனாயிருக்கிறான். (கலாத்தியர் 5:4) இதனால் பழைய ஏற்பாட்டிற்கு எந்த

நோக்கமுமில்லை என்று சொல்லுவதற்கு இல்லை. (ரோமர் 15:4, 1 கொரிந்தியர் 10:11) ஆனால் அது இன்றிருக்கிற மக்களுக்கு பிரமாணமாக அமைவதில்லை.

## ஏன் இரண்டு ஏற்பாடுகள்

இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை கீழ்கண்ட உதாரனத்தின் மூலம் விளக்கலாம். ஒரு மனிதனுக்கு அதிக பணமும் நிலமும் இருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். தனது பிள்ளைகளுக்கு அது எப்படி பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி அவர் ஒரு உடன்படிக்கை அல்லது உயில் ஒன்று எழுதி வைக்கிறார். ஆகையால் அவர்களுக்கும் சொத்து கிடைக்கும்படி புதிய உடன்படிக்கையை உண்டாக்குகிறார். இப்போது பழைய (உயிலுக்கு) உடன்படிக்கைக்கு எந்த அதிகாரமுமில்லை.

அதைப்போலவே தேவன் மோசேயின் பிரமாணமாகிய உடன்படிக்கையை யூதர்களுக்குக் கொடுத்தார் (உபாகமம் 5:2,3) ஆனால் தேவன் இந்த உடன்படிக்கையை மாற்றி புதிய ஏற்பாட்டை நாம் எல்லாரும் கடைபிடிக்கும்படி கொடுத்திருக்கிறார். (யாக்கோபு1:25).